
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7-MAY 1949
MADRAS

# அருணகிரியந்தாதி

திருவண்ணாமலை - குகை நமச்சிவாயதேவர் அருளிச்செய்தது



மகாவித்வான்-மே. ஆறுமுகமுதலியார் இயற்றிய பொழிப்புரையுடன்.

மகள் விலாசம் பிரஸ்

1949 [விலை அணா 8

0-, 12MNT,A
N49
113186

உ

கடவுள் துணை

குகை நமச்சிவாயதேவ ரருளிய

# அருணகிரியந்தாதி

மூலமும்

சென்னைக் கல்விச் சங்கத்தில் ஒருவராகிய

மகாவித்வான்

**வே. ஆறுமுக முதலியார் அவர்கள்**

இயற்றிய

**பொழிப்புரையும்**

அமரம்பேடு. இரங்கசாமி முதலியார் குமாரர்

**அ. குழந்தைவேல் முதலியார்**

தெய்வமகள் விலாச அச்சுக்கூடம்

பதிப்புரிமை] 1949 [விலை அணா 8

நெ. 24. தாண்டவராயப்பிள்ளைவீதி, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF B.
MADRAS



# குகைநமச்சிவாயர் வரலாறு

[தமிழ் வித்வான் T. ஓ. பார்த்தன் எழுதியது]

[Copy Right]

ஸ்ரீ அகண்டாகார சச்சிதானந்த பரிபூரண சுயம்பிர காசப் பொருளாகி விளங்கும் தனிப்பெரும் பொருளை இடைவிடாமல் தியானித்து விளங்கும் வீரசைவ மடாதிபதியாகிய தன்னுரியன் அடிபணிந்து கைகுவித்து நிற்கும் தம் மாணுக்கராய்ப் பொலியும் குகைநமச்சிவாயரை நோக்கி, 'அப்பா! இன்று உனது முகத்தில் ஏதோ கவலை தோன்றுகின்றனவே ; அதற்குக் காரணம் என்னவோ' என வினவினர்.

அப்போது குகைநமச்சிவாயர், என்னருமந்த குருவே! நான் எத்துணைநாள்தான் இம்மல்லிகார்ச்சுனத்திலிருந்து நாளைப் போக்குவேன், தேவரீர் கருணை பாலித்தால் இக்கணமே அடியேன் தென்திசை சிவாலயங்களைத் தரிசித்து வருகிறேனென்று புறப்பட்டு வருகையில், இடையே அண்ணாமலையப்பன் ஆரியனாகிவந்து அருள்செய்ய, குகைநமச்சிவாயர் தன்னிலை மறந்து இவ்வெண்பா அந்தாதியால் பாடித் துதித்தார்.

## இலக்கணம்

"அருணகிரி அந்தாதி" இச்சொற்றொடர் அக்கினி மலையுருவாகிப் பொருளான அண்ணாமலையானைப்பற்றிக் கூறும் அந்தாதி எனப் பொருள். அருணம் - சிகப்பு, கிரி-மலை, அருணகிரி - சிகப்புமலை, அதாவது, நெருப்புமலை. அந்தாதி-அந்தம் + ஆதி = அந்தத்தை முதலாகவுடையது என்ப.

அது, சிவந்த மலையானைப்பற்றிய வந்தாதி என விரிதலால், இரண்டாம் வேற்றுமைத் தொகையினடியாகப் பிறந்த தொடர் என்பர்.

உ

சிவமயம்

# அருணகிரியந்தாதி

## மூலமும்-உரையும்

காப்பு

### விநாயகர் துதி

சித்திதரும் புத்திதருஞ் செந்திருவைச் சேர்விக்
பத்திதரு மெய்ஞ்ஞானம் பாலிக்கும்-கொத்தி [கும்
அரிமுகனைக் காய்ந்த வருணேசர் தந்த
கரிமுகனைக் கைதொழுதக் கால்.

(இதன் பொருள்.) ஸ்ரீ மகாவிஷ்ணுவான வர், இரணிய சம்மார நிமித்தம் கற்றூணில் நரசிங்கமாய் உதித்து, அவ்விராக்ஷதனுடைய மார்பைப் பிளந்து உதிரத்தைக் குடித்து வெறி கொண்டு லோகா லோகங்களை எல்லாம் அதம் பண்ண எத்தனித்த காலத்தில், சார்த்தூல பட்சி யாய் அவதாரஞ் செய்து, நரசிங்கத்தைப் பிளந்து வைகுந்தத்துக்கு அனுப்பிய அருண சல ஈஸ்வரர் புத்திரராகிய யானைமுகத்தையுடைய விநாயகக் கடவுளைத் தொழுதவர்களுக்குக் காரிய சித்தியும், நல்ல புத்தியும், இலட்சுமி கடாட்ச மும், தெய்வபக்தியும், மெய்ஞ்ஞானமும் உண்டா கும் என்றவாறு.

கார்கொண்டமேனியனுங் கஞ்சனுங்காணுப்பெரு
ஆர்கொண்டுரைசெய்வாரம்புவியிற்-சீர்கொண் [மை
டருணகிரி மேவுகின்ற வையா! நீ வேண்டிக்
கருணைபுரி யாதிருந்தக் கால்.

(இ-ள்.) மேகம்போன்ற திரேகத்தையுடைய மகாவிஷ்ணுவும், தாமரை மலரிலுதித்த பிரமதேவனும் காணுதற்கு அரிதாகிய உமது பெருமையை இப்பூமியின்கண் உள்ளவர்களில் யார் அறிந்து துதிக்கவல்லவர்கள் கைலையையொத்த திருவண்ணுமலையில் எழுந்தருளிய ஐயனே! நீர் கிருபை செய்யாவிடில் எ-று. 1

காலைமலர் தூவக் கருத்தறியா நாயேற்கு
வேலைவிட முண்ட விமலனே!—மேலாய
வாசிகனே! கண்பலித்து வாழ்விக்குஞ் சோணகிரி
தேசிகனே நீகண்டாய் திக்கு. [த்

(இ-ள்.) திருப்பாற்கடலில் உதித்த விஷத்தையுண்ட நிர்மல ஸ்வரூபனே! மூர்த்திகளுக்கு மேலாகிய கடவுளே! மாணிக்கமலை என்னும் அருணுசலத்திற்கு அதிபனே! சராசரங்களை அன்போடு இரட்சிக்குந் தயாபரனே! காலையில் நல்ல மலர்களைக் கொண்டு, பக்தியுடனே உமது பாதாரவிந்தத்தைத் துதிக்கத்தக்க அறிவில்லாத எளியேனுக்கு உம்மை அல்லாமல் வேறு திக்கு உண்டோ? இல்லை எ-று. 2

திக்குவே றில்லை திருவுளமே யல்லாமல்
இக்குவே ளைக்காய்ந்த வீசனே!—மிக்கவிடந்
தன்னையுண்ட சோணகிரித் தாணுவே! நாயேற்
பின்னையுண்டோ நீயல்லாற் பேசு. [குப்

(இ-ள்.) கரும்பை வில்லாக வளைத்துச் சரா சரங்களை மயக்கும் மன்மதனை நெற்றிக் கண்ணால் எரித்த அருணாசலக் கடவுளே! திருப்பாற்கடலில் எழுந்த விஷத்தை அமுதம்போல் உண்ட கால காலனே! அடியேனுக்கு உம்மையல்லாமல் வேறு திக்குண்டோ? சொல்லு எ-று. 3

பேசுமவர் வஞ்சப் பிறப்பறுக்கு மென்றுலகில்
வீசுபுகழ்ச் சோணகிரி வித்தகா!—மாசிலா
அண்ணா மலையானே! யன்னைவயிற் றென்னையுருப்
பண்ணா மலையா! கண் பார்.

(இ-ள்.) மெய்யன்போடு துதிப்பவர்களுடைய பிறவித்துன்பத்தை மாற்றுவாரென்று இப்பூமி யின்கண் உள்ள புண்ணியவான்கள் புகழும் அருணாசலக் கடவுளே! இதுவரையிலும் பிறவித் துன்பத்தில் உழன்ற அடியேனை இனியாவது தாய் வயிற்றில் உருப்படுத்தாத கிருபாநோக்கஞ் செய்யும் எ-று. 4

பாராம னீயிருந்தாற் பார்மீதி னடியேனுக்
காராவார் சோணகிரி யண்ணலே!—தீராப்
பிறப்பை யகற்றுதற்கும் பிஞ்ஞகனே! சூழ்ந்த
இறப்பை யகற்றுதற்கு மின்று.

(இ-ள்.) மூடனாகிய அடியேன்பேரில் தேவரீர் கடாட்சம்வைத்து இரட்சியாவிடில் இப்பூமியில் என்னை இரட்சிப்பவர் உண்டோ? இல்லை. திரு வண்ணாமலையில் வாசஞ்செய்யுங் கர்த்தனே! பிறப் பிறப்பு என்னுஞ் சமுத்திரத்தில் அடியேன் மூழ் காவிதங் அருள்செய்யும் எ-று. 5

இன்றுபோ காவோ விருவினையு மும்மலமு
நின்றுதமி யேனை நெருக்காமல்—நன்றிதரு
ஆரணனே! சோணகிரி யத்தனே! மாறேடுங்
காரணனே! நீநினை ந்தக் கால்.

(இ-ள்.) அடியேனைப் பற்றியிருக்கும் இரு வினையென்னும் நல்வினை தீவினையும் மும்மல மென்னும் ஆணவம் மாயை காமியமும் எளி யேனை வருத்தாமல் இன்றே நீங்காதோ? நல்ல குளிர்ச்சிபொருந்திய கங்கையைச் சடாமகுடத் தில் தரித்த அருணசலக்கடவுளே! ஸ்ரீ மகாவிஷ் ணுவும் பிரமதேவனும் காணுதற்கு அரிய கர்த் தனே! தேவரீர் கிருபாநோக்கஞ் செய்தால் எ-று.

காலன் றனக்கஞ்சக் காரணமென் னெஞ்சமே!
ஆல முகந்த வருணேசன்—கோலத்தை
நேசமுற்று நீகருதி னீங்காம னின்றலைக்கும்
பாசமுற்று நீக்கும் பரன்.

(இ-ள்.) அஞ்ஞானம் பொருந்திய எனது மனமே! நீ இயமனுக்குப் பயப்படவேண்டிய காரணம் என்ன? விஷத்தையுண்ட அருணசலக் கடவுளைப் பக்தியுடன் துதித்தால் உன்னைவிட்டு நீங்காமல் வருத்தும் பாசபந்தங்களை யறுப்பார்.

பரமனீ யென்று பணிந்துருகிப் பாடிக்
காஞ்சேர்த்து நீர்சோரக் கண்கள்—வரங்கேட்ட
என்னவா வின்படியே யீந்தா யிதற்கருணை
மன்னவர்! காணேன்கைம் மாறு.

(இ-ள்.) என் ஐயனே! அருணாசலத்தில் வசிக்கும் பரமேஸ்சுவரன் நீயே என்று பக்தியோடு தெண்டனிட்டு தோத்திரஞ் செய்து இருகரங்களையுஞ் சிரசின்மேல் கூப்பி இரண்டுகண்களிலும் ஆனந்தவெள்ளம் பொங்கிநின்று அடியேன் ஆசையோடு கேட்ட வரங்களை யெல்லாம் கருத்தின்படியே கொடுத்தீர். இதற்கு என்னால் செய்யப்பட்ட பிரதி உபகாரம் ஒன்றும் காணேன் எ-று. 8

மாறுகொண்ட தக்கன்மனோரதமெல்லாந்தவிர்த்து
வீறுகொண்ட சோணகிரிவித்தகா!-வாறுகொண்ட
செஞ்சடையா! நின்னைத் தெரிசித்தல் வேண்டுமென்கண்
பஞ்சடையா முன்னே பரிந்து.

(இ-ள்.) உம்முடைய மகிமை அறியாமல் விரோதங்கொண்ட தக்கனுடைய எண்ணங்களைக் கெடுத்து வெற்றிபெற்ற அண்ணாமலையாரே! கங்காதேவியைத் தரித்த சிவந்த சடாமகுடத்தை யுடையவரே! வயது முதிர்ந்து என் கண்கள் பஞ்சி அடையா முன்னம், தேவரீரைப் பக்தியுடனே கண்டு தரிசிக்க வேண்டும் எ-று. 9

பரிந்தணிந்தவெண்ணீறும்பாப்புந்தீக்கண்ணும்
அரிந்தசிர மாலை யழகுந்—தெரிந்து
நெருக்குமாம் வல்வினையை நீக்குமருணைசற்
கிருக்குமாங் கோலங்க ளேத்து.

(இ-ள்.) நம்மை வருத்துகிற கொடிய வினையை அகற்றும் அருணாசலக் கடவுளின் உருவம் எப்படியெனில், பிரகாசத்துடனே

யணிந்த வெண்ணீறும், நாகாபரணமும், அக்கினிக் கண்ணும் உருத்திரர்களால் அறுத்துக் கோத்த சிரமாலையும், பொருந்தியதாம்; அதைக் கண்டு மனமே! நீ துதிப்பாய் எ-று. 10

கோலமுதற் றேடிநெஞ்சே கூப்பிட்டுங் காணுத
கோலங் குருவடிவு கொண்டேதான்—ஆலந்
தரித்தபிரான் சோணேசன் றன்முனிந்து வேளை
எரித்தபிரான் வந்தா னிதென்.

(இ-ள்.) அஞ்ஞானம் பொருந்திய என் மனமே! பிரம்மாவினுலும், விஷ்ணுவினுலும் தேடிக் காணுதற்கு அரியவரும், திருப்பாற் கடலில் எழுந்த காளகூட விஷத்தைக் கண்டத்தில் தரித்தவரும், மன்மதனை எரித்தவரும் ஆகிய அருணசலக் கடவுள் குருவடிவுகொண்டு வந்தது என்ன காரணம்? எ-று. 11

என்ன தவப்பயனே வேழையேற்கென்றறியேன்
முன்னமறை காணுத முக்கண்ணு!—நின்னையே
தேடுகைக்குஞ் சோணகிரித் தேசிகனே! நின்புக
பாடுகைக்கும் பெற்ற பயன். [ழைப்

(இ-ள்.) நான்கு வேதங்களும் தேடிக் காணுதற்கு அரிய அருணசலக் கடவுளே! ஏழையாகிய நான் முன் ஜன்மத்தில் என்ன புண்ணியஞ் செய்தேனே? தேவரீரை ஆசையோடு தேடுதற்கும், தேவரீரது கீர்த்தியைத் துதித்தற்கும் ஏதுவாகிய பலனைப் பெற்றேன் எ-று. 12

பெற்றோம் பலனைப் பிறந்ததனு னெஞ்சமே!
அற்றோ மனத்தி லனவரதம்—பற்றுவார்
உள்ளலைக்குந் தீவினையை யோட்டு மருணகிரி
வள்ளலைக் கொண்டாட வரம்.

(இ-ள்.) மனமே! நாம் இந்த மானிட ஜனனம் எடுத்ததால், மெய்யன்போடு துதிப்பவர்களது தீவினை யகற்றும் அருணசலக் கடவுளைத் துதிக்க வரம் பெற்றோம் எ-று. 13

வரம்பலிக்கு மெய்ஞ்ஞான வாழ்வே பலிக்குந்
திரம்பலிக்குஞ் செல்வம் பலிக்கும்-உரம்பலிக்குஞ்
சோண சலனைச் சுவாமிதனை யுள்ளத்தே
காணர் கருத்தென் கருத்து.

(இ-ள்.) அஞ்ஞானத்துக்கு இடமாகிய என் மனமே! அருணசலக் கடவுளைத் துதித்தால் நினைத்த வரமும், மெய்ஞ்ஞானமும், நீடித்தவாழ்வும், நல்ல புத்தியும், இலட்சுமி கடாக்ஷமும், தைரியமும் உண்டாகும் எ-று. 14

கருத்தி லருணேசன் கஞ்சமலர்த் தாளை
இருத்தி நினைப்பாரை யென்றும்—வருத்துமோ
நாட்டும் பலவுயிரை நாடோறும் பின்றொடர்ந்து
வாட்டும் பிறவிநோய் வன்பு.

(இ-ள்.) ஸ்ரீ கைலாசபதியாகிய அருணசலக் கடவுளுடைய தாமரை மலரை ஒத்த இரண்டு பாதங்களையும் மனத்தில் இருத்தித் துதிப்பவர்களை எழுவகைத் தோற்றமாகிய ஜீவராசிகளைத் தொடர்ந்து பிறப்பிக்கும் பிறவி நோயானது வருத்துமோ எ-று. 15

வன்பெருக்கிற் கன்மிதக்கும் வாய்முதலை
பிள்ளைதரும், என்புருக்கொள் பெண்ணா யிருக்
குமே—அன்பருக்கு, நாட்டுகுரு சோணகிரி நாத
னடி யார்மூவர், பாட்டினிசை கேட்ட பரம்.

(இ-ள்.) பூமியிலுள்ள அன்பர்களுக்குக் குருமூர்த்தமாகி, மெய்ஞ்ஞானம் உபதேசிக்கும் அருணாசலக்கடவுளது அடியார்களுள் மூவராகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர், என்னும் மகான்களுடைய திருப்பாடல்களைக் கேட்டால் சமுத்திரத்திலிட்ட கருங்கல் மிதந்து கரை ஏறும்; முதலை விழுங்கிய பிள்ளை பிழைத்துவரும், எலும்புகள் பெண்ணுருவாய் எழுந்திருக்கும் எ-று. 16

பரமனரு ணேசன் பதம்பணியார்க் கென்றுங்
கருமஞ் சிதையுமெனல் கண்டோம்—அருமந்த
கூட்டுத் தலைபோய்க் கொடியதக்கன் வேள்வியி [லே
ஆட்டுத் தலையாகை யால்.

(இ-ள்.) பரப்பிரம்ம சொரூபியாகிய அருணாசலக் கடவுள் பாதாரவிந்தங்களைத் தியானஞ் செய்யாதவர்கள், செய்யுங் கருமம் சிதையும் என்பதைப் பிரத்தியட்சமாகக் கேட்டிருக்கிறோம். அதேனெனில், கர்வத்தினால் அவரை மதியாமல் யாகஞ்செய்த துன்மார்க்கனாகிய தக்கன் சிரசை யிழந்து ஆட்டுத்தலை பெற்றதால் எ-று. 17

ஆலம் வருவதுகண் டஞ்சி யமரர்குழாஞ்
சால வெருண்டோடுஞ் சமயத்தில்—ஓலமென
நின்றா னுலகரிய நேசமடி யாரிடத்துக்
குன்றாத சோணகிரிக் கோ.

(இ-ள்.) சமுத்திரத்தில் ஆலகால விஷம் பரவி வருவதைக் கண்டு தேவர்களெல்லாம் நடு நடுங்கி பயந்து ஓடி முறையிட்ட காலத்தில், அவ் விஷத்தைத் தமது திருக்கரத்தால் எடுத்துப் புசித்து நின்றூர் அடியார்களிடத்தில் பரிபூரண கடாட்சம்வைத்த அருணசலக்கடவுள் எ-று. 18

கோடிவிதி மாளிற் குலாவுகம லக்கண்ணன்
ஓடி வடவா லுறங்குமே—நாடுமகால்
அக்கண்ணர் கோடி யழியி னருணகிரி
நக்கனருள் சற்றே நகும்.

(இ-ள்.) கோடி பிரமாக்கள் பிறந்து ஒவ் வொருத்தரும் தெய்வவருஷத்தில், நூறுயிரம் வருஷம் தமது தொழில்களை நடத்தி இறந்தால், தாமரை மலரையொத்த கண்களுடைய ஸ்ரீ மகா விஷ்ணு சென்று வடவிருட்சமான ஆலவிருட் சத்தின் இலையில் பள்ளிகொள்வார். அதுபோல, கோடி மகாவிஷ்ணுக்கள் அழிந்தால், நக்கன் என்னும் அருணசலக் கடவுள் சற்றுநேரம் புன்னகை செய்வார் எ-று. 19

நகுமானை யேந்தருணை நம்பா! பிறப்பிற்
புகுவேனைக் காக்கும் புனிதா!—தகுமேனைப்
பெற்றதுணை நீயல்லாற் பேருலகி னுயேனுக்
குற்றதுணை மற்றியாவ ரோது.

(இ-ள்.) புன்னகையையுடைய மானெனும் பார்வதியை இடப்பாகத்தில் தரித்த அருணசலக் கடவுளே! பிறப்பு என்னும் ஊசலிற்புகும் அடியேனை அவ்வழியிற் புகுதாமல் காக்கும் ஜீவ

காருண்ணியனே! இவ்விடத்தில் எனக்கு நெருங்கிய துணை நீயல்லாமல்பெரிய உலகத்தினிடத்தில் உள்ளவர்களில் யார் நீ சொல்வாய் எ-று. 20

ஓதக் கடனஞ்சை யுண்டசோ ணுசலனே
ஓதக் கடனெஞ்சே! யோதினுற்—பாதம்
பெறலா நமது பிணிமூப்புச் சாக்கா
டறலாங் கரையேற லாம்.

(இ-ள்.) (மூடத்துவம் பொருந்திய என்) மனமே! சொல்லுதற்கு அரிய சமுத்திரத்தில் உற்பவித்த விஷத்தைப் புசித்த அருணுசலக் கடவுளைத் துதிப்பாயாக. அப்படித் துதித்தால், அவருடைய திருப்பாதங்களைக் காணலாம்; நமது பிணி மூப்பு சாக்காடு என்னும் மூன்று உபாதிகளையும் நீக்கலாம், (முத்தியாகிய) கரை ஏறலாம் எ-று. 21

ஆமென்று நம்பி யனுதினமும் போற்றினுல்
நாமென்று பற்றி நலமாகக்—காமித்துச்
சிட்டாகுஞ் சோணகிரி சிந்தித்தா னெஞ்சமே!
விட்டேகும் வெய்ய வினே.

(இ-ள்.) (அஞ்ஞானம் பொருந்திய) என் மனமே! திருவண்ணுமலேயில் எழுந்தருளி யிருக்கும் அருணுசலக்கடவுளைப் பரப்பிரமமென்று பத்தியுடனே எந்நாளுந் துதித்தால், அப்பெயர்க்கு உரியவன் நானேயென்று எதிர்ப்படுவர்; அதனுல் நமது கொடியவினே நீங்கிப் போம்; எ-று. 22

வெய்ய பிறவிதனை வேரறுக்குஞ் சோணகிரி
ஐயாடி யார்பாட்டிற் கல்லாமற்—றுய்யகரா
வாய்க்குமோ பிள்ளையுந்தண் வாரிதியிற் கன்மிதந்
காய்க்குமோ வாண்பனையுங் காய். [து

(இ-ள்.) கொடியதாகிய பிறவித் துன்பத்தை வேரோடு களையும் அருணாசலக் கடவுளது அடியார்கள் பாடல்களுக் கல்லாமல், முதலைவாயில் அகப்பட்ட பிள்ளை உயிர்த்தெழுமோ? சமுத்திரத்திலிட்ட கருங்கல் மிதந்து கரையேறுமோ? ஆண்பனை காய்க்குமோ? எ-று. 23

காய நெகிழாமுன் கண்களிருளாமுன்
வாயினுள்ள பல்லும் வழுவாமுன்-காயம்பார்த்
தோடிநமன் வாராமுன் உள்ளமே சோணகிரி
நாடிநம வென்றே நட.

(இ-ள்.)(சுக துக்கங்களுக்கு இருப்பிடமாகிய) மனமே! சரீரந் தளர்ந்து வருத்தம் அடையாததற்கு முன்னும், கண்கள் ஒளி குறையாமுன்னும், வாயிலுண்டாகிய பற்கள் குறைந்து அசையாததற்கு முன்னும், நமது தேகத்தைக் கண்டு இயமன் நெருங்காமுன்னும், அருணாசலக்கடவுளைத் துதித்து எதிர்கொள்வாய் எ-று. 24

நடக்குங் குலங்கல்வி நம்மவென்பா ராசை
அடக்கும் வகைசற் றறியார்—தொடுக்குநூல்
காட்டுமோ சோணேசன் கஞ்சமலர்த் தாளிணை
கூட்டுமோ சொல்லீர் குலம். [யைக்

(இ-ள்.) தங்கள் நடக்கையால் உண்டாகிய உயர்ந்த குலமும், நிறைந்த கல்வியும், நாமே

பெற்றோம் என்பார்; ஆசை யென்னும் துக்க மதை அடக்க அறியார்; தாங்கள் கற்ற நூல்கள் அருணாசலக் கடவுளின் தாமரைமலரையொத்த பாதங்களைக் காட்டுமோ? உயர்ந்த குலமும் அவருடன் சேர்க்குமோ? சொல்வீர் எ-று. 25

குலமில்லார் வணமைக் குணமில்லார் கல்வி
நலமில்லா ராணு நன்றே—வலம்வந்
தரிய திருவருணை யண்ண லுக்கா ளாவார்
பெரியவர்க்கு மேலான பேர்.

(இ-ள்.) உயர்ந்த குலத்தைப் பெருதவர்கள் ஆனாலும், நல்லபுத்தி இல்லாதவர்கள் ஆனாலும், கல்வி இல்லாதவர்கள் ஆனாலும் நன்றே; சொல்லுதற்கு அரிய திருவருணையை வலம்வந்து அருணாசலக்கடவுளுக்கு அடியார் ஆனால், அவர்களே வேதசாஸ்திரங்களை உணர்ந்த அந்தணர்களுக்கு மேலான பெரியோர் எ-று. 26

பேரும் பெருவாழ்வும் பிள்ளைகளும் வேண்டுவார்
ஆரும் பரவு மருணேசன்—சீரை
உறக்கத் திலுமறக்க வொண்ணா துரைக்கிற்
பிறக்கக் கிடையாது பின்.

(இ-ள்.) கீர்த்தியையும் மிகுந்த செல்வத்தையும் புத்திரர்களை வேண்டி வருந்துபவர்கள் அவ்வாசையை நீக்கி வேதத்தின்பொருளையறிந்த தபோதனர் முதலிய சகலரும் துதிக்கும் அருணாசலக் கடவுள் புகழை நித்திரையிலும் மறவாமல் சிந்திப்பாரானால், பிறப்பு இறப்பை நீக்கி மோட்சத்தை யடைவார் எ-று. 27

பின்னறியேன் முன்னறியேன் பேதையேன்
பாமாலை, என்னறியேன் சோணகிரி யீசனே!—
நின்னருளைக், கொண்டுரையா நிற்குங் குறியுங்
குறிதேடுங், கண்டுரையா தென்றன் கருத்து.

(இ-ள்.) சதுர்யுகத்திலும் அழிவில்லாத அருணாசலக் கடவுளே! அறிவில்லாதவனாகிய அடியேன் பூர்வஜனனங்களையும் அறியேன்; இனிமேல் உண்டாகுஞ் ஜனனத்தையும் அறியேன்; தேவரீரைப் பாமாலைகளைக்கொண்டு துதிக்கவும் அறியேன்; உமது கிருபாகடாக்ஷம் அறிந்து சொல்ல அரிதாயிருந்தாலும் திவ்ய மங்கள சொரூபத்தின் பெருமையாவது இன்னதென்று குறியாது என்னுடைய நெஞ்சம் எ-று.

கருத்தறிந்த மெய்யடியார் கண்காண வெள்ளை
எருத்தில்வருஞ் சோணகிரி யீசா!—பருத்த
அலங்கார நால்வேத னைந்தலையு ளொன்றைக்
கலங்காம னீயறுத்தாய் கண்டு.

(இ-ள்.) நல்ல புத்தியுடைய அடியார்கள் கண்களால் கண்டு தரிசிக்க வெண்மை நிறமுள்ள இடபத்தின்மேல் ஏறிவரும் அருணாசல ஈசனே! மிகுந்த அலங்காரத்தையுடைய நான்கு வேதத்தையும் உணர்ந்த பிரமனது ஐந்து சிரசில ஒரு சிரசை பார்த்து நீர் மனக்கிலேசமில்லாமல் அறுத்தீர் எ-று. 29

கண்டுமிணை யென்பார் கருத்துதா வும்வாழி [ஞ்
அண்டர்கோவே! யருணை யண்ணலே!-விண்டுவா
சங்கையெடுத்தோன்கண் சரணத்திற சாத்துமுன்
செங்கையிலே வேதன் சிரம். [றன்

(இ-ள்.) பக்தர்களாகிய பெரியோர்கள் தேவரீரது திருவிளையாட்டைக் கண்களால் கண்டாலும் இன்னுங் காணவேண்டும் என்னும் விருப்பத்தால் கண்டதில்லையென்பார். இவர்களை யொத்த பெரியோர்களது கருத்தையும் நாவையும் ஆலயமாகக்கொண்ட தேவதேவனே! அண்ணுமலையீசனே! வெண்மை நிறமுள்ள சங்கைத்தரித்த ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் தாமரைமலருக்கொப்பாகிய தமது கண்களிலொன்றைத் தேவரீரது பாதத்திற் சாற்றி இருக்கிற உமது சிவந்த கரத்தில் பிரம்ம கபாலம் எதிர்கொண்டீர் எ-று.

சிரமாலை தானணிந்து சேவிலுகந் தேறி
அருமா மறைதேடு மண்ணல்—வருமா
மூனிக்கூட்டம் போற்று முதல்வ னருணேசன்
இனிக்கூட்டான் றுன்பத் தெமை.

(இ-ள்.) சிரமாலை அணிந்து இடபவாகனத்தின்மேல் விருப்பத்தோடு ஏறும் அரிதாகிய நான்குவேதங்களுந் தேடப்பட்ட சர்வேசன் மகா தவத்தைப பெற்ற மூனீஸ்வரர்கள் தோத்திரஞ் செய்யும் அருணசலக் கடவுள் எங்களைத் துக்க சாகரத்திலே அலையவிடார் எ-று. 31

எமையாளுஞ் சோணகிரி யீசா! நின் பாகத்
துமையாளு நீயு முகந்த—சமயத்
திருக்கின்ற கோலத்தை யான்காண வேண்டி
இருக்குங் கருணைசெய்வா யென்று.

(இ-ள்.) எங்களை அடிமை கொண்டாளும் அருணசலக கடவுளே! உமது இடப்பாகத்தில் அமைந்திருக்கும் உமையவளும், தேவரீரும்

சந்தோஷத்துடனிருக்கும் அலங்காரத்தை மூடனாகிய யான் கண்களாற்காண இச்சித்தேன்; கடாட்சம் செய்வீர் எ-று. 32

என்று மருணேச னிருபதத்தை நம்பாதார்
குன்றில் வனத்திற் குகையதனிற்—சென்று
திரிந்தேன் பலமருந்து தின்றுசில காலம்
இருந்தே னிராமலிருந் தேன்.

(இ-ள்.) எப்போதும் அருணாசலக் கடவுளது இரண்டு பாதங்களையும நம்பித் துதியாத பேர்கள் துறவடைந்து, மலையிலும் காட்டிலும் குகையிலும் போய் திரிந்தால் என்ன? அனேக ஔஷதங்களான இலை சருகுகளைப் புசித்துச் சிலகாலம் உயிரோடிருந்தால் என்ன? இராமல் இருந்தால என்ன பிரயோசனம்? ஒன்றுமில்லை எ-று. 33

ஏனமனந் தேட விணையடியுஞ் சீர்முடியுந்
தானவற்றிற் கெட்டாத தாணுவாம்—ஞானத்
தழல்கண்ட மேனித் தலைவனருணேசன்
கழல்கண்டார் காணார் கரு.

(இ-ள்.) ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் பன்றியாகவும், பிரமாவானவர் அன்னமாகவும் ரூபங்கொண்டு இணையில்லாத அடியையும் சிறப்புற்று ஓங்கிய முடியையும் கற்பகோடிகாலந் தேடியும், அவர்களுக்குப் புலப்படாமல் நின்ற அழலை ஒத்த திருமேனியையுடைய அருணாசலக் கடவுளது பாதாரவிந்தங்களைக் கணடு தரிசித்தவர்கள் பிறப்பு இறப்பென்னு மூசலில் வருந்தார்கள் எ-று. 34

கருமா முகில்வண்ணன் கஞ்சனுக்கு மெட்டாப்
பெருமான் விடையேறும் பெம்மான்—ஒருமான
மழுவேற்குஞ் சோணகிரி மன்னனடி யாரைத்
தொழுவேற்கு முண்டோ துயர்.

(இ-ள்.) கருத்த மேகத்தையொத்த தேகத்தையுடைய மகாவிஷ்ணுவும், தாமரை மலரில் உதித்து எழுந்த பிர்மாவும், தேடுதற்கரிய பெருமானும் இடபவாகனத்தின்மேல் ஏறும் மகாதேவனும், மான் மழுவேந்தும் காலகாலனுமான அருணசலக் கடவுளது மெய்யடியார்களைக் கண்டு துதிப்பவர்களுக்குத் துயரம் உண்டோ? இல்லை எ-று. 35

துயர்கொண்டு நாளுந் தொலையாப் பிறப்பில்
அயர்கின்ற நாயேற்கு மாமோ—உயர்தவத்தோர்
ஆரும் பரவு மருணேச ரம்புயத்தாள்
சேருங் கருத்தொருக்காற் செப்பு.

(இ-ள்.) துன்பத்தைக்கொண்டு எந்நாளும் அழியாத பிறவிக்கடலிலே அலைநின்ற அடியேனுக்கு அக்கடலை நீந்திக் கரையேறுதல் உண்டாமோ? மிகுந்த தபோதனர்களால் துதிக்கும் அருணசலக் கடவுளே! உமது பாதாரவிந்தங்களை அடையும் நெறியை ஒருதரஞ் சொல்லும் எ-று. 36

செப்பரிய மால்பிரமர் சிந்தைதனக் கெட்டாத
அப்பெரிய சோணகிரி யப்பனே!—எப்பொழுதும்
பெண்ணைவிட்டு நீங்கா நின் பேரழகு சந்ததமென்
கண்ணைவிட்டு நீங்காது காண்.

(இ-ள்.) சொல்லுதற்கரிய மகாவிஷ்ணுவாலும் பிரமதேவனாலும் நினைத்தற்கரிய பெரிய அருணாசலக் கடவுளே! எப்போதும் மலைமகளை விட்டு நீங்காத தேவரீரது பேரழகு எக்காலமும் அடியேனது இரண்டு கண்களையும் விட்டு நீங்காது எ-று. 37

காணா ரரிபிரமர் கஞ்சமலர்த் தாளிணையை
நாணமற் றூன்காண நாடியே—சேணாடர்
ஆயும் புகழருணை யண்ணா மலையானே!
மாயுந் தமியேன் மனம்.

(இ-ள்.) தேவலோகத்தாரால் தோத்திரஞ் செய்யும் அருணாசலக்கடவுளே! மகாவிஷ்ணு பிரமதேவன் இவர்கள் தேவரீர் பாதாரவிந்தத்தைக் காணார். அதைச் சாஸ்திரங்களா லறிந்தும் புல்லறிவனாகிய யான் காண நாடியதால் எளியேன மனம் விசாரப்படுத்தும் எ-று. 38

மனத்திற் பயமறிந்து மாமுனிவர்க் காகச்
சினத்திற் புரமெரித்த சீமான்—அனத்தனருள்
தக்கன் றலையறுத்த தாணு வருணகிரி
நக்கன் றணைமனமே! நம்பு.

(இ-ள்.) மனமே! முனீஸ்வரர்களும் தேவர்களும முப்புராதியர்களால துன்பப்படும் வகை அறிந்து கோபமுற்று முப்புரத்தை எரித்த தயாபரன் பிரமன் பெற்ற தக்கன் தலையை யறுத்த அருணகிரிநாதன் மனமேநமக்குத் துணையென்று நம்புவாய் எ-று. 39

நம்பியிரு நெஞ்சமே! நாலு மருணகிரி
உம்பர்கோ னென்றுரைத்த வுண்மையை—நம்பிக்
கெடுத்தாலுஞ் சோணேசன் கேடுபடா தெய்மை
எடுத்தாலுஞ் சோணேச னென்று.

(இ-ள்.) (அஞ்ஞானம் பொருந்திய) என் மனமே! நீ எப்போதும் நம்பி யிரு. நான்கு வேதங்களும் அருணாசலக்கடவுளே தேவரென்று சொல்லும் உண்மையை நீ நம்பி இருந்து நம்மைக் கெடுத்தாலும் அல்லது கேடுறாமல் இரட்சித்தாலும் சோணேசரென்று சொல்வாய் எ-று.

என்று தருவாய்மகிழ்ந்தே யான்பெறுவதெந்தநா
இன்று தமியேற் கியம்பிடாய்—நன்றிதரும் [ள
ஏகனே! சோணகிரி யீசனே! சேவேறும்
வாகனே சாகா வரம்.

(இ-ள்.) நன்மையைத்தரும் ஏக வஸ்து வான அருணாசலக் கடவுளே! இடபவாகனம் ஏறும் கர்த்தனே! தேவரீர் எனக்கு அழியாத வரம் என்றைக்குக் கொடுப்பீர்? மூடனாகிய யான் என்றைக்குப் பெறுவேன்? இப்போது அடியேனுக்குச் சொல்வீர் எ-று. 41

சாகா வரம்பெறலாஞ் சந்ததமுஞ் சோணகிரி
நாகா பரணன்றா ளடியே—ஏகாந்த [தை
நண்ணுமக்க மாலைகொடு நாவார வைந்தெழுத்
எண்ணு மறவா தெடுத்து.

(இ-ள்.) என்றைக்குஞ் சாகாவரம் பெறலாம். அது எப்படியெனில்: நாகங்களை ஆபரணமாகப் பூண்ட அருணாசலக்கடவுளது பாதாரவிந்தத்தை

இப்போது நம்பி ஏகாந்தமாக உருத்திராட்ச மாலையைக்கொண்டு நாவினுல் பஞ்சாட்சரத்தை மறவாமல் செபி எ-று. 42

எடுத்த பயனை யிருவினையை யெண்ணார்
அடுத்தசிவ பூசை யறியார்—தொடுத்த
நெறியாகுஞ் சோணகிரி நித்தரடி யாரை
அறியாத மானிடவ பச்சு.

(இ-ள்.) இந்த ஜெனனம் எடுத்த பயனையும் நல்வினை தீவினை என்னும் இருவினையையும் நினையார்; நெருங்கிச் சிவபூசையும் செய்யார்; நல்லநெறி மிகுந்த அருணசலக் கடவுளது மெய்யடியாரையும் அறியார்; மானிடர் என்று சொல்லும் மௌடீகர் எ-று. 43

அச்செல்லா மொன்ரு வதிலே யிருவகையா [லே
வைச்சதென்ன சோணகிரிவள்ளலே!—இச்சையி
வாழ்ந்து சிலபேரிருக்க வாய்புதைத்துக் கைகட்
தாழ்ந்துசில பேரிருக்கத் தான். [டித்

(இ-ள்.) அக்கினி ஸ்வரூபம் பொருந்திய அருணசலக்கடவுளே! சகல மானிடரையும் ஒரு அச்சினுல் சிருஷ்டித்து அதில் இரண்டு பிரிவாகப் பிரித்துச் சிலர் தங்களிஷ்ட பாக்கியங்களை அநுபவித்து வாழ்ந்துக்கொண்டிருக்கவும் சிலர் தாித்திரராய் மெலிந்து வாய்மூடிக் கைகட்டிக் கொண்டு வாழ்வை உடையவர்களுக்குத் தாழ்ந்து பணிவிடை செய்யவும் வைத்ததென்ன? எ-று.

தானே யுலகுடையோன் றன்னசைவே பல்லுயிர்க்
தானே யனைவர்க்குந் தாதைதாய்—தானே [குந்
அனைத்துயிருங் காக்கு மருணேச னென்றுன்
மனத்துயரம் போவதே மாண்டு.

(இ-ள்.) நானே உலகங்களிலெல்லாம் நிறைந்தவன், என்னசைவே சராசர முதலிய சகல ஜீவராசிகளுக்கும்; நானே எல்லார்க்குந் தந்தைதாய்; நானே சகல ஜீவஜெந்துக்களைக் காக்கும் அருணாசலக் கடவுளென்று சொல்லிய கர்த்தனைத் தியானித்தால் மனத்தின்கண் உண்டாகிய துக்கமானது நாசமாய்ப்போகும் எ-று. 45

மாண்டு பிறந்துழலு மாப்பிணியை நீக்குதற்கு
வேண்டு மருந்துனக்கு வேண்டினால்—ஈண்டுலகி
வீணேசர் சொல்லை விரும்பாம னெஞ்சமே! [ல்
சோணேச ரென்றொருகாற் சொல்.

(இ-ள்.) (மூடத்துவம் பொருந்திய என்) மனமே! இறந்தும் பிறந்தும் உழலப்பட்ட கொடிய வியாதியை நீக்குதற்குத் தகுந்த மருந்து உனக்கு வேண்டியிருந்தால் இவ்வுலகத்தில் இருக்கும் வீணான தெய்வங்களைக் கருதாமல், அருணாசலக் கடவுளே யென்று ஒருதரஞ் சொன்னால் அதுவே நல்ல மருந்தாம் எ-று. 46

சொல்லரிய நால்வேதஞ் சொன்னபடி யேகருதி
நில்லரிய பூசையிலே நேசமா—வெல்லரிய
நெஞ்சே தரித்தருளு நாதரடித் தாமரையை
நெஞ்சே! மறவாம னீ.

(இ-ள்.) துன்பத்துக்கு இருப்பிடமாகிய எனது நெஞ்சமே! சொல்லுதற்கு அரிய நான்கு வேதங்களும் முறையிட்டதுபோலவே நினைத்து அரிதாகிய சிவபூசையிலே பக்தியோடிருந்து வெல்லுதற்கு அரிய விஷத்தைக் கண்டத்தில் தரித்த அருணாசலக்கடவுளது பாதாரவிந்தத்தை மறவாமல் நினைத்துக்கொண் டிருப்பார் எ-று. 47

நீயே வரல்வேண்டு நின்னைப்போ லானதுணை
நாயேனுக் கியாருண்டு நாடுங்காற்—றூயகமாம்
அண்ணு மலைமேவு மப்பனே! யென்பிறவிப்
புண்ணு மலையகற்றும் போது.

(இ-ள்.) அருணாசலத்தில் வசிக்கும் அப்பனே! என் பிறவிநோயாகிய மலையை நீக்கும்போது நீயே வந்து இரட்சிக்க வேண்டும், நினைக்குமிடத்தில் உம்மைப்போல் ஆதாரமாகிய துணை அடியேனுக்கு யார் உண்டு? இல்லை எ-று.

போதுமதி சூடும் புனிதா புவியீன்ற
மாதுபங்க ரண்ணு மலைநாதர்—பாதம்
இறுகப் பிடிமனமே! யெந்நாளு நின்னைக்
குறுகப் பயப்படுமே கூற்று.

(இ-ள்.) மனமே! இளஞ்சந்திரனைச் சடாமகுடத்தில் தரித்தவரும், பூலோகத்தைப் பெற்ற மாதாவாகிய பார்வதியை இடப்பாகத்தில் வைத்தவருமாகிய அருணாசலக்கடவுளது பாதாரவிந்தங்களை நீ கெட்டியாகப் பிடி, கூற்றுவனென்னும் இயமன் எப்போதும் உன்னிடத்தில் நெருங்கப் பயப்படுவான் எ-று. 49



113186
O-12MNT, 8
N49

கூற்றிருக்குமுன்காலிற் கூறுபுறங்காலில் [கையில்
ஏற்றிருக்கு மாயவன்க ணெப்பொழுதுஞ்-சாற்று
அம்புயத்தோன் கம்மிருக்கு மண்ணு மலைநாதன்
செம்புயத்திற் காரிணையாஞ் செப்பு.

(இ-ள்.) இயமதர்மராஜனை மார்க்கண்டன் நிமித்தம் உதைத்ததால் அவன் முன் காலில் விழுந்து கிடப்பன்; புறங்காலில் மகாவிஷ்ணுவானவர் சக்கராயுதம் பொருட்டுத் தினம் தினம் நூறு தாமரைப் புட்பங்கொண்டு அர்ச்சிக்கும் நாளில் ஒரு நாள் அவர் பக்தியைச் சோதிக்கும் பொருட்டு ஒரு புட்பத்தை மறைத்ததால் அந்த புட்பத்திற்குப் பதிலாகச் சாத்திய மகாவிஷ்ணுவினது கண் இருக்கும்; சொல்லுதற்கரிய கரதலத்தினிடத்தில் தாமரைமலரிலுதித்த பிரமன் தனக்கு ஐந்து சிரசென்று கர்வங்கொண்டதை யறிந்து கிள்ளிய சிரமிருக்கும்; இவ்விதப் பெருமையுடைய அருணசலக் கடவுளுக்குச் சமானமானவர் யார்? மனமே! நீ சொல்லுவாய் எ-று. 50

செப்பரிய ஞானச் செழுஞ்சுடரே! சோணகிரி
அப்பனே! நன்னூ லறிந்தாலும்—இப்புவியிற்
கொண்டகுருவைப் பொருளாக்கொள்ளார்பயனே
கண்டவெல்லாம் வீணிலே கற்று. [து

(இ-ள்.) சொல்லுதற்கு அரிய ஞானத்தின் பொருளாகிய அருணசலக் கடவுளே! உமது ஆகம சாஸ்திரங்களைப் பழுதறக் கற்றாலும் இப் பூவுலகின்கண் தங்களை அடிமையாகக் கொண்ட ஞாஞசிரியரைப் பொருளாகக்கொண்டு கரையேறு

தவர்கள் பல சாஸ்திரங்களைக் கற்றும் வீணாவது அன்றிப் பயன் பெறார் எ-று. 51

கற்றதனாற்றொல்லைவினைக்கட்டறுமோ நல்லகுலம்
பெற்றதனாற் போமோ பிறவிநோய்—உற்றகடல்
நஞ்சுகந்துகொண்டருணை நாதரடித் தாமரையை
நெஞ்சுகந்து கொள்ளா நெறி.

(இ-ள்.) திருப்பாற்கடலில் உதித்த விஷத்தை விருப்பத்தோடு உண்ட அருணாசலக் கடவுளது பாதாரவிந்தத்தை மெய்யன்போடு துதித்து வணங்காமல் பல சாஸ்திரங்களைக் கற்றதனால் முன் ஜனனத்திற் செய்த கொடியவினை நம்மை விட்டு நீங்குமோ? நல்ல உயர்ந்த குலததில் பிறநததால் பிறவியென்னும் அவ்வியாதி நெருங்காமற் போமோ? எ-று. 52

நெறியுண்டா நல்ல நிலையுண்டா ஞானக்
குறியுண்டா மெண்ணமெலாங் கூடுஞ்-செறிவுண்
ஆதியருணகிரி யண்ணலாரைந்தெழுத்தை [டாம்
ஓதிமட நெஞ்சமே! யுன்.

(இ-ள்.) அஞ்ஞானப் பொருந்திய என் மனமே! ஆதியாகிய அருணாசலக் கடவுளது பஞ்சாட்சரத்தைப் பக்தியுடனே ஜெபித்தால் நல்ல நெறியும் அழியாத பதவியும் ஞானப்பிரகாசமும் உண்டாம்; நினைத்த கருமங்கள் எல்லாம் விக்கினமின்றி முடியும் எ-று. 53

உன்னக் கருத்துண் டுரைப்பதற்கு நாவுண்டு
பன்னச் சிவநூல் பலவுண்டு—முன்னமறைக்
கெட்டாத சோணகிரி யீசரிரு தாள்பணிய
வொட்டாது பாவ முயர்ந்து

(இ-ள்.) நினைப்பதற்குக் கருத்தும், துதி செய்ய நாவும், வாசிக்கச் சிவபுராணங்கள் பலவும் தடையில்லாதிருந்தும், நான்கு வேதங்களுக்கும் எட்டாத அருணாசலக் கடவுளது இரண்டு பாதங்களையும் வணங்கித் துதித்து நற்கதியை அடைய ஒட்டாமல் முன்செய்த கொடியவினை எதிரில் நின்று தடுக்கும் எ-று. 54

உயர்ந்தவர்க்கு ளெல்லா முயர்ந்திருக்குங்கோவே!
நயந்தபுகழ்ச் சோணகிரி நாதா!—பயந்தமரர்
உண்ணப்படாநஞ்சை யுண்டவுன்னைச்சாமவரோ
டெண்ணப் படுவா ரிதென்.

(இ-ள்.) உயர்ந்த பொன்னுலகத்தின்கண் வசிக்கும் தேவர்களுக்கு அரிய தெய்வமாகிய தேவாதி தேவனே! சகல ஜீவஜெந்துக்களையும் இரட்சித்துப் புகழ்பெற்ற அருணாசலக்கடவுளே! தேவர்கள் எல்லாம் பயந்து முறையிட்ட காலத்தில் உண்ணுதற்கு அரியவிஷத்தைவிருப்புடனே உண்ட தேவரீரை இறந்துபோகும் தேவர்களுக்குச் சமமாய் நினைப்பார் இது என்ன அதிசயம் எ-று. 55

என்ன சனன மெடுத்தார் புவிமீதில்
அன்னமிடா ரின்சொல் லறிகிலார்—முன்னமே
ஒன்னார் புரமெரித்த வுண்ணா முலைபாக
என்னார் திருநீ றிடார்.

(இ-ள்.) இவ்வுலகத்தின் கண்ணுள்ள மனிதர் என்ன சனனம் எடுத்தார்? அன்னதானஞ் செய்யார்; பிறருக்கு விருப்பத்தைக் கொடுக்கும்

நல்ல சொற்களையும் சொல்லார்; முன்னே தேவர் களுக்குப் பகைவராகிய திரிபுரத்தாரை எரித்த உண்ணுமுலை அம்மையினது இடப்பாகத்தி லுடையவனே என்றுஞ் சொல்லார்; வெண்மை பொருந்திய திருநீறும் அணியார் எ-று. 56

நீறிடே னைந்தெழுத்தை நேசமுட னேகருதிக்
கூறிடேனென்னையுமாட்கொள்வதனுக்-காறணிந்
வேணியார்சோணகிரி வித்தகனார்வெற்றிமழுப் [த
பாணியார்க் கன்றோ பரம்.

(இ-ள்.) திருநீறுந் தரியேன்; பஞ்சாட் சரத்தையும் பக்தியுடனே நினைந்து செபியேன்; அப்படிப்பட்ட அறிவீனனாகிய என்னையும் அடிமைகொண்டு இரட்சித்தருளுதற்குக் கங்கை யைத் தரித்த சடாமகுடத்தை உடையவரும் மான் மழு தரித்தவரும் ஆகிய அருணாசலக் கடவுளுக் கல்லவோ பாரம் எ-று. 57

பரகதிக்கு வித்தாமுன் பஞ்சாக்கரத்தைப்
பாபரப்ப வெண்ணாத பாவ—நரகப்
பிறப்பிற்கு மீடாப் பிறந்தருணை யீசா
இறப்பிற்கு மீடாயி னேன்.

(இ-ள்.) மெய்யறிவை யுடையவர்கள் துதிக் கும் அருணாசலக் கடவுளே! பரகதி என்னும் மோட்சத்திற்கு வித்தாகிய உமது பஞ்சாட் சரத்தைப் பக்தியுடனே ஜெபியாத பாவத்தினால் நரகம் என்னும் பிறப்பிற்கு ஈடாகப் பிறந்து இறப்பிற்குஞ் சமம் ஆனேன் எ-று. 58

வனிருந்து நெஞ்சே! யிரவுபக லாயுடலைத்
தானொறுப்பாய் சோணகிரித் தாணுவா-மானுகந்
எந்தையா னீங்கு மிருவினைநோய் சிந்திக்குஞ் [த
சிந்தையால் வேறென் செயல்.

(இ-ள்.) மூடத்துவம் பொருந்திய எனது நெஞ்சமே! நீ வன் இரவும் பகலுமாக ஒழியாமல் சரீரத்தை நிந்திக்கிறாய் மான்மழு தரித்த அருணாசலக் கடவுளாகிய என் அப்பனால் நல்வினை தீவினை என்னும் இருவினையாகிய நோய் நம்மைவிட்டகலும்; அந்த ஈசனைத் துதியாமல் சரீரத்தை நிந்தித்தால் பிரயோசனம் என்ன? எ-று. 59

என்செயலாஞ் சோணேச ரிட்டபடியே யொழிய
நெஞ்சையெலாம் புண்ணா நினைந்தாலும்-விஞ்ச
வருமோ பெருவாழ்வு வல்லமையா னெஞ்சந்
தருமோ நம் பேராசை தான்.

(இ-ள்.) நம்மாலே என்ன செய்யலாம் அருணாசலக் கடவுளமைத்த கட்டளையின்படி அல்லாமல் மனது புண்ணாகக் கவலை கொண்டாலும், நமது வல்லமையினால் மிகுந்த வாழ்வு வருமோ? மனமானது பேராசையின்படியே கொடுக்குமோ? எ-று. 60

தானே யெனக்குத் தவமாய்த் தவப்பயனாய்த்
தானே யெனக்கன்னை தாதையாய்த்-தானென்னை
செப்பரிய நின்பாதஞ் சேர்விக்குஞ் சோணகிரி [ச்
அப்பனே! நீயேறு மான்.

(இ-ள்.) அந்தரவாசிகள் துதிக்கும் அருணு சலக் கடவுளே! தேவரீர் இடப்பாகத்தில் தரித்த பார்வதி என்னு மானே! எனக்குத் தவமும் தவத்திற் பெறப்பட்ட பேரும் தாய்தந்தையு மாகச் சொல்லுதற்கு அரிய உன் பாதத்திற் சேர்க் கும் எ-று. 61

ஆனவர நல்குநதி யாயிரஞ்சென் ருடுகிலென்
தானம்பதினுறுந் தான்செயினென்-ஆனனங்கள்
அஞ்சுடையான் சோணகிரி யண்ணறனை யெண
நெஞ்சுடையார் பூதலத்தே நின்று. [ணுத

(இ-ள்.) சத்தியோசாதனம், வாமனம், அகோரம், தத்புருஷம், ஈசானியம் என்னும் ஐந்து முகத்தை உடைய அருணுசலக் கடவுளைப் பக்தியோடு துதியா நெஞ்சையுடையவர்கள் இப் பூவுலகின்கண் வேண்டிய வரங்களைக் கொடுக்கும் கங்கையையொத்த ஆயிரம் நதிகளிற் சென்று ஸ்நானஞ் செய்தாலும் முப்பத்திரண்டு தருமங் களையும் வழுவாமல் நடத்தினுலும் பிரயோசனம் என்ன? ஒன்றும் இல்லை எ-று. 62

நின்று தவம்புரியாய் நெஞ்சமே திருக்கோயில்
சென்றுசிவ பூசையறஞ் செய்கிடாய்-வென்றிதரு
மம்மான் கரத்த ணருணேச னம்புயத்தாள்
சும்மா கிடைக்குமோ சொல்.

(இ-ள்.) அஞ்ஞானம் பொருந்திய என் மனமே! நீ ஓரிடத்தில் நின்று தவஞ் செய்யாய் சிறப்புப் பொருந்திய ஆலயததிற் சென்று சிவ பூசை செய்து தருமத்தையும் நடத்தாய்; அப்

படி இருக்க, வெற்றியைக் கொடுக்கும் அழகிய மானைக் கரத்தில் ஏந்திய அருணாசலக் கடவுளது தாமரைமலரை ஒத்த பாதம் சும்மாகிடைக்குமோ? சொல்வாய் எ-று. 63

சும்மா கிடைக்குமோ சோணா சலன்பாதம்
அம்மால் விரிஞ்ச னறிகிலார்—நம்மால்
இருந்தகதை சொன்னக்கா லென்னாகு நெஞ்சே!
பொருந்த நினையாத போது.

(இ-ள்.) மனமே! பல ஆசையை நீக்கி ஒரு நிலையில் நின்று துதிக்காமல், அருணாசலக் கடவுளது திருப்பாதம் சும்மா கிடைக்குமோ? அந்தப் பிர்மாவும் விஷ்ணுவும் அநேக காலந் தேடியும் அறியார். நாம் கிடைக்கும் என்று செருக்கினால் கதை சொல்லுதலால் என்ன பிரயோசனம்? எ-று. 64

போதையிரு பல்லுகுத்துப் புண்டரிகன் றேவியை
மாதையன்று மூக்கரிந்த மாவீரன்—றாதை [னு
விருப்பா மதிசூடி வெண்டலையோ டேந்தி
இருப்பா னருணேச னின்று.

(இ-ள்.) தக்கனுடைய யாகத்தில் சூரியனுக்கு இரண்டு பல்லுதிர்ந்தும் புண்டரீகம் என்னும் தாமரை மலரில் உதித்த பிர்மாவின் தேவியாகிய சரஸ்வதியை மூக்கரிந்தும், பேர்பெற்ற வீரபத்திரரது தந்தையாகிய அருணாசலக்கடவுள் விருப்பத்துடன் இளஞ்சந்திரனைச் சடையில் தரித்தும் பிர்ம கபாலத்தைக் கையிலேந்தியும் இருப்பார் எ-று. 65

இன்றைக்கு நாளைக் கிரவிற் கெனுந் துயரம்
என்றைக்குப் போமருணை யீசனே!—கொன்றை
புன்னை யெருக்கும் புனையுஞ் சடாடவியாய்! [மதி
என்னை நெருக்கு மிவை.

(இ-ள்.) அருணாசலக் கடவுளே! கொன்றை மாலையையும் புன்னைமாலையையும்எருக்கமாலையையும் சந்திரனையும் சடா மகுடத்தில் தரித்தவரே! இன்றைக்கும் இராத்திரிக்கும் வேண்டும் நாளைக்கும் வேண்டும் என்னும் சமுசார துக்கம் நெருங்காமல் என்னைவிட்டு என்றைக்கு நீங்கும்? எ-று.

நெருக்குமிவையென் னுயிரை நீங்காமற் சூழ்ந்தே
இருக்கும் பலபிணி நோ யெல்லா-முருக்கும்வகை
கண்டே னருணேசன கஞ்சமலர்த் தாள்கருத்திற்
கொண்டே னெனக்கென் குறை.

(இ-ள்.) என்னை வருத்தும் மனைவியையும், என்னுயிரை விட்டு நீங்காமல் சூழ்ந்திருக்கும் கொடிய வியாதிகளையும் அகற்றும் வகையறிந்தேன்; அருணாசலக் கடவுளது பாதாரவிந்தத்தைக் கருத்தில் கொண்டேன்; இனி எனக்கு என்ன குறை? எ-று. 67

குறையே துமில்லையினிக் கூறுங்கால்வானோர்க் [ம்
கிறையாகுஞ்சோணேசற் கென்று-மறைபுகுந்தோ
பற்றி நமன்றூடரான் பார்க்குங்கா னெஞ்சமே!
வெற்றி நமன் கைத்தலத்து வேல்.

(இ-ள்.) மூடத்துவம் பொருந்திய மனமே! சொல்லும் இடத்தில் நமக்கு யாதொரு குறையும் இல்லை; தேவர்களுக்குத் தேவனாகிய அருணாசலக்

கடவுளுக்கு என்று சரீரத்தை நியமித்துச் சரணம் அடைந்தோம் இயமதருமன் நம்மைப்பற்றி நெருங்காமல் அவன் கரத்தில் இருக்கும் சூலாயுதத்தையும் ஜயித்தோம் எ-று. 68

வேலை விட-முண்ட விமலரரு ணேசர்கொன்றை
மாலையணி மார்பர் மலர்ப்பதத்தை—மேலமரர்
பண்ணினூர் பூசையறம் பண்ணிப் பரகதியில்
நண்ணினு ரெல்லா நலம்.

(இ-ள்.) திருப்பாற்கடலில் உதித்த விஷத்தை உண்டவரும்,கொன்றைமாலையைத்தரித்தமார்பை உடையவருமாகிய அருணாசலக்கடவுளது பாதாரவிந்தங்களைப் பூசைசெய்து தேவர்கள் முதலிய சகலரும் நற்கதி அடைந்தார்கள் எ-று. 69

எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லாற்றெளிந்தே நஞ் சோணேசர்—இல்லிற்
பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட்டி லேம்.

(இ-ள்.) உலகத்தின்கண் உள்ளவருடைய பிறப்பும் இறப்பும் இயல் இசை என்னும் இலக்கணங்களை யறிந்த வித்வான்கள் சொல்லிய நூல்களினுல் அறிந்தோம்; நமது அருணாசலக் கடவுள் ஒருவர் வீட்டிலே பிறந்தார் என்கிறதையும் இறந்தார் என்கிறதையும் கேட்டிலேம் எ-று.

ஏமாந்த சோணகிரி யீசரடி யாரடிக்கே
பூமா மலர்தூவிப் போற்றுதார்—தாமென்றும்
வெஞ்சமனத்திருக்கும் வேடராய் நாடோறும்
வஞ்சநம னுக்கஞ்சு வார்.

(இ-ள்.) பொன்னின் அழகை வாய்ந்த திருவண்ணுமலேயிலமர்ந்த ஈஸ்வாரது அடியார்களுடைய பாத தாமரைகளில் நல்ல புட்பங்களேச் சாத்தித் துதித்து நற்கதி அடையாதவர் எப்போதுங் கொடிய மனத்துடன் உனே வெறுத்திடுவேடராய் வஞ்சனேயுடைய இயமனுக்குத் தினம் பயப்படுவார் எ-று. 71

வஞ்சநம னுக்கஞ்சி வாடுந் தமியேனே
அஞ்சலென்றசோணகிரி யண்ணலே!-நெஞ்சறிய
ஆண்டகுரு நீயென் றறியாதார் செய்ததவ
மாண்டமாத் திற்கணேத்த மண்.

(இ-ள்.) வஞ்சகனுகிய இயமனுக்குப் பயந்து சோர்வடையும் எளியேனேப்பயப்படாதே என்று அபயஸ்தங் கொடுத்த அருணுசலக் கடவுளே! மனம் அறிய இரட்சிக்குங் குரு தேவரீரென அறியாதவர் செய்த தவமானது பட்டுப்போன மரத்திற்கு அணேத்த மண்போல் வியர்த்தமாம் எ-று. 72

மண்ணிற் பிறந்திறந்து மாயுந்தெய் வங்களோ
டெண்ணப் படாவருணே யீசனே!-விண்ணப்பம்
ஒன்றுண டடியே னுனேப்பிரியா தேயிருக்க
என்று தருவா யெனக்கு.

(இ-ள்.) இப்பூவுலகின்கண்பிறந்து இறந்து போகும் தெய்வங்களுக்குச் சமமாக எண்ணப் படாத அருணுசலக் கடவுளே! ஒரு விண்ணப்பம் உண்டு. அது என்னவெனில், அடியேன தேவரீரது பாதாரவிந்தங்களே விட்டு நீங்காமல் இருக்க வரந் தருவீர்கள் எ-று, 73

தருவா யெனக்குகந்துன் றன்னிருதா டன்னை
மருவார் புரமெரித்த மன்னு!—குருவாகி
முன்னை வினையகற்றி மூர்த்தி யருணேச!
என்னைப் பொருளா வெடுத்து.

(இ-ள்.) அருணாசலத்தில் வசிக்குங் கர்த்தனே! என்பேரில் ஆசை வைத்து வரந் தருவீர். உம்முடைய இரண்டு பாதங்களையும் வணங்கித் துதியாத திரிபுரத்தாரை எரித்த தேவ தேவனே! தேவரீர் குருவாக வந்து யான் பூர்வத்திற் செய்த கொடிய வினையை அகற்றி என்னை ஒரு பொருளாக மதித்து இரட்சியும் எ-று. 74

எடுப்பானுங் காப்பானு மேற்பானு மேற்பக்
கொடுப்பானு மேதுங் கொடானும்-விடப்பானம்
பண்ணி யனேகர் பயங்கெடுத்த சோணகிரிப்
புண்ணியனே! நீகாணிப் போது.

(இ-ள்.) அடியார்களை ஒரு பொருளாக மதித்துச் சிருஷ்டிக்கிறவனும் நீயே; சிருஷ்டித்து இரட்சிக்கிறவனும் நீயே; ஒருவரிடத்தில போய் யாசிக்கசெய்கிறவனும் நீயே; யாசிக்கிறவனுக்கு கொடுப்பவனும் நீயே; லோபத்தனமாய் ஒன்றும் கொடாதவனும் நீயே; விஷத்தைப் புசித்து அனேகம்பேருடையபயத்தைக்கெடுத்து இரட்சித்த அருணாசலக் கடவுளே! புண்ணிய ஸ்வரூபனே! எல்லா விஷயங்களுக்குக் காரணம் இப்போது தேவரீர் தான் எ-று. 75

இப்போது பின்னைக் கிலையென் றிராப்போரை
எப்போதுந் தள்ளா திரங்கியே—முப்போதும்
பூசிப்ப தெந்நாள் புனிதனே! சோணகிரி
நேசிப்ப தெந்நா ளினைந்து.

(இ - ள்.) இப்போதைக்கில்லை பின்னைக்கில்லை என்று யாசிப்பவர்களை எப்போதும் நீங்காமல் மனதிரங்கி இரட்சிக்கும் அருணாசலக் கடவுளே! தேவரீரை அடியேன மூன்று காலங்களும் விடாமல் பூசைசெய்வது எந்தநாள்? புனிதமானவனே! யான் சோணாசலத்தை நினைத்து நேசிப்பது எந்தநாள்? எ-று. 76

நினையேன றிருக்கோல நின்றுகண்ணீர் சோர
நனையேன் பிறப்பறுக்க நாடேன—புனையேனின்
பொனனடிக்குப் பூமாலை போற்றி யருணேச!
பின்னடிக்கிங் காருதவும் பேர்.

(இ-ள்.) தபோதனர்கள் துதிக்கும் அருணாசலக் கடவுளே! புல்லறிவனாகிய யான் உம்மை நினையேன்; தேவரீரது ஆலயத்திற்கு வந்து நின்று இரண்டு கண்களிலும் ஜலம் பெருக அதனால் நனையேன்; பிறப்பு என்னும் வலையை அறுக்கவும் நாடேன்; உமது பொன் போன்ற பாதங்களுக்கு புட்பமாலை சாத்தித் தோத்திரஞ் செய்யேன். இவ்வித மௌடீக புத்தியையுடைய எனக்கு இறக்குங் காலத்தில் உதவி செய்கின்றவர்கள் யார்? எ-று. 77

பேரா யிரமுடைய பெம்மானைச் சோணகிரி
யாரா வமுதை யறியாமல்—வாராது
தீது நலமுந் தெரியுங்கா னெஞ்சமே
யேதுமவ னென்றே யிரு.

(இ-ள்.) நெஞ்சே! ஆயிர நாமத்தையுடைய அருணாசலக் கடவுளைத் தெவிட்டாத அமிர்தத்துக் கொப்பானவரை யறியாமல் நன்மையும்

துன்மையும் உண்டாகா; சகலமும் அவன் என்றே எண்ணி இருப்பாயாக எ-று. 78

இருந்துநினைப் பார்த மிருவினையை நீக்கும்
பொருநதுமிடி யிம்மையிலே போக்கு—மருந்தன
தம்பிரா னெவ்வுயிர்க்குந் தாணு வருணகிரி [ரே
யெம்பிரா னோஞ் செழுத்து.

(இ-ள்.) சகல ஜீவஜெந்துக்களுக்கும் கர்த்தனாகிய அருணாசலக் கடவுளது பஞ்சாட்சரம் என்னும் ஐந்தெழுத்தை மௌனமாக நின்று சேவிப்பவர்களுடைய நல்வினை தீவினை என்னும் இரண்டையும நீக்கும். இப்பிறப்பிற் பொருந்திய தரித்திரத்தையும போக்கும் மருந்து அல்லவோ? எ-று. 79

அஞ்செழுத்தையோ துமவர்க் கஞ்சியவர் தலையிற்
றஞ்செழுத்தைக்கஞ்சன் றுடைக்குமே-யஞ்சுதலைக்
கொன்றறுத்து நாலா வொருகுறையா நின்றதலை
இன்றறுப்பான் சோணேச னென்று.

(இ-ள்.) தாமரைமலரிலுதித்த பிரமதேவன், ஐந்தெழுத்து என்னும் பஞ்சாட்சரத்தை ஜெபிப பவர்களுக்குப் பயநது அவர் தலையில் எழுதிய இறப்பெழுத்தைக் கலைத்து விடுவன். அதேனெனில் நமக்கும் ஐந்துதலை, ஈஸ்வரருக்கும் ஐந்துதலை என்று கர்வங்கொண்டதால்கோபித்து முன்னிருந்த ஐந்து சிரசில் ஒரு சிரசை அறுத்த அருணாசலக் கடவுள் இப்போது இருக்கும் நான்கு சிரசையும் இன்றைக்கு அறுத்தெரிவார் என்று நினைத்து எ-று. ௮0

என்று நமன் றூதுவரை யேற்கவே தானழைத்து
நின்றுரைக்குஞ்சோணகிரி நிதத்தனுர்க் கின்றடிமை
யானவர்க்கு நீர்வணங்கி யப்பாலே போமென்று
தானவர்க்குப் புத்தியாத் தான்.

(இ-ள்.) எப்போதும் இயமதர்மராஜன் தன் தூதர்களை யழைத்து எதிர்நின்று அருணாசலக் கடவுளுக்கு அடிமையானவர்களைக் கண்டால் நீங்கள் அவர்களை வணங்கித் துதித்து அப்பாற் போங்கள் என்று புத்திவரும்படி சொல்வான் எ-று. 81

புத்திதருஞ் சோணேசன் பொன்னடியை
வாழ்த்துதற்குப், பத்திதரு மெய்ஞ்ஞானம்
பாலிக்கு—முத்திதரும், மாற்றறிய தீவினையை
மாற்றுவிக்கு மைந்தெழுத்தைப், போற்றறிய
நெஞ்சமே! பூண்டு.

(இ-ள்.) அருணாசலக் கடவுளது பொன் போன்ற பாதங்களைத் துதிப்பவர்களுக்கு நல்ல புத்தியும் தெய்வபக்தியும் மெய்ஞ்ஞானமும் மோட்சமும் கொடுக்கும். வெல்லுதற்கு அரிய தீவினையை நீக்கும். ஆகையால் துதித்து நற்கதி யடைவதற்கு அரிதாகிய எனது நெஞ்சமே! பஞ்சாட்சரத்தை மறவாமற் செபித்துத் தோத்திரஞ் செய்வாய் எ-று. 82

பூணடவகைக் கெல்லாம் பொருந்துமணி மூத்
திருக்க, வேண்டும் பசும்பொன் விளைவிருக்கத்—
தீண்டாமற், பொங்காவுந் தோலெலும்பும்
பூண்டாயி தென்னருணைச், சங்கரா! கங்கா தரா!

(இ-ள்.) ஆபரணமாக அணிவதற்கு இசைந்த இரத்தினங்களும் மூத்துகளும் அதற்குவேண்டிய பசுமைபொருந்திய பொன் விளைவுமிருக்க அவைகளை அணியாமல் விஷத்தை உண்டு பாம்பும் புலித்தோலும் எலும்பும் ஆபரணமாகத் தரித்தாய் இது என்ன திருவண்ணாமலையில் வசிக்குங் கர்த்தனே! கங்கையைச் சடாமகுடத்தில் தரித்தவனே! சொல்வீர் எ-று. 83

கங்கா தரனே! கடையேனை யெந்தநாள்
அங்கா தரவா வழைக்குநாள்—நங்காதல்
பார்க்குநாள் சோணேச! பார்த்துப் பரகதியிற்
சேர்க்குநா ளெந்தநாள் செப்பு.

(இ-ள்.) அருணாசலக் கடவுளே! கங்காதரனே! கடையேனாகிய என்னை ஆதரவோடு அழைத்து உமது பாதத்திற் சேர்க்குநாள் எந்த நாள்? என்னுடைய விருப்பத்தை அறிந்து பரகதி என்னும் மோட்சம் கிடைக்கும்நாள் எந்த நாள்? சொல்வீர் எ-று. 84

செப்பரியவாணவத்தைச் சேதமுறுமும்மலத்தை
யொப்பிலாச் சஞ்சிதத்தை யோட்டினே-னிப்போ
தருவாகி நின்ற வருணகிரி யானைக்
குருவாக வென் னுளத்தே கொண்டு.

(இ-ள்.) எப்படியெனில் அருவுருவாக இருக்கும் அருணாசலக் கடவுளைக் குருவாக எனது நெஞ்சத்திற்கொண்டு சொல்லுதற்குஅரிய ஆணவம், மாயை, காமியம் என்னும் மூம்மலத்தையும் இணையில்லாத சஞ்சலத்தையும் இப்போது என்னைவிட்டு நீக்கினேன் எ-று. 85

கொண்டநெறி சற்றுங் குலையார் மனத்திருக்கும்
அண்டர்கோவேயருணை யண்ணலே-தொண்டர்க்
கிடையாது நெஞ்ச மிருவினையா லென்று
மடையா தெழுபிறப்பா மல்.

(இ-ள்.) தாங்கள் கொண்ட நெறிமுறை கிஞ்சித்துங் கெடாத அடியார்களது மனதில் நிலைத்திருக்கும் தேவனே! அண்ணுமலைக்கு இறைவனே! உம்முடைய அடியார்களுக்குப் புத்திகெடாது நல்வினை தீவினை என்னும் இரு வினையால் எழுவகைத் தோற்றம் என்னும் துன்பத்திற்கு இடமாகிய பிறப்பு எப்போதும் அணுகாது எ-று. 86

அல்லதொரு தெய்வ மறியே னறிந்தாலும் [ரிய
நல்லதென் றுநெஞ்சகத்தினுடேன்யான்-சொல்ல
வண்ணு பலைமேவு மண்ணலையு மண்ணலிடத்
துண்ணு முலையாளை யும்.

(இ-ள்.) சொல்லுதற்கு அரிய அண்ணுமலையில் வசிக்குங் கர்த்தனையும், அவரது இடப்பாகத்தில் அமர்ந்த உண்ணுமுலை யம்மையையும் அல்லாமல் வேறே தெய்வத்தை அறியேன்; அப்படி அறிந்தாலும் இது மோட்சத்தைக் கொடுக்கும் நல்ல தெய்வமென்று இருதயத்தில் நினையேன் எ-று. 87

உம்மை நினைந்தே யுருகி யருணேசர்
தம்மை நினைந்தார் தமக்கல்லா—லிம்மையிலே
யெல்லாருங் காண வெளிதோ புவிமீதி
னல்லார் துதிக்க நடம்.

(இ-ள்.) மூவாசையை ஒழித்த ஞானவான்கள் துதிக்கும் அருணசலக்கடவுளை உம்மை உண்மையாக நினைத்து மனம் உருகித் தோத்திரஞ் செய்பவர்களுக்கு அல்லால் இப்பிறப்பில் மற்ற யாவருங் கண்டு தெரிசிக்க அரிதோ! இப்பூவுலகத்தின்கண் நல்ல பெரியோர்கள் கண்டு தோத்திரஞ் செய்யும் நடனம் எ-று. 88

நடலையறுத் தாளருணை நம்பனுக்கன் பில்லார்
உடலையொறுத் தாலாவ துண்டோ-அடலைநூல்
ஓதினுற் பாச மொழியுமோ புற்றிலே
மோதினுற் பாம்புசா மோ

(இ-ள்.) நடலை என்னும் பிறப்பை அறுத்து இரட்சிக்கும் அருணசலக்கடவுளிடத்தில் அன்பு இல்லாதவர்கள் ஜெபதபங்களில் உடலை வருத்தியதால் ஆவது ஒன்று உண்டோ? வேத சாஸ்திரங்களை வாசித்ததினுல் ஆசாபாசம் என்னும் கர்மங்கள் அவர்களை விட்டு நீங்குமோ? நீங்காது. அப்படிப்போல புற்றைத் தடிகொண்டடித்தால் அதனுள்ளிருக்கும் பாம்பு இறந்து போகுமோ? இறவாமல் உள்ளிருத்தல் போல அவர்கள் பாப கர்மங்களும் நீங்காது எ-று.

ஈஸ்வரபக்தி இல்லாதவர்கள் செய்யும் விரதம் விருதாவாம், என்பதாம். 89

மோகமறேன்சோணகிரிமூர்த்தியே! மும்மலத்தின்
மூகமறே னின்பெருமை தானறியேன்—காகநாய்
தம்மதென் னுங்காயத்தைத் தானெடுத்துத்தாரணி
னம்மதென் னுங் கண்டாய் நரி. [யி

(இ-ள்.) அருணுசலக் கடவுளே! புல்லணு கிய யான் மோகம் என்னும் ஆசையை நீக்கேன்; ஆணவம், மாயை, காமியம் என்னும் மும்மலத்தி ணுல் உண்டாகிய விருப்பத்தையும் அகற்றேன்; உமது பெருமை இப்படிப்பட்டது என்று மறியேன்; மானிட சரீரத்தைப் பெற்றுக் காக்கை, நரி, நாய் முதலியவைகள் தங்களுக்கு இரை யென்று நினைத்துக் கொள்வது அல்லாமல், அச் சரீரத்தால் வேறு பிரயோசனங் காணேன் எ-று.

நரிக்குப் பொதிசோறு நான்சுமந்து நொந்தேன்
அரிக்கு மரிதா மரனே!—தெரிக்குமறை
காணுதசோணகிரிக் கண்ணுதலேநின்பதத்தைப்
பேணுத நாயேன் பிறந்து.

(இ-ள்.) மகாவிஷ்ணுவுக்கும் காணுதற்கு அரிய ஈசனே! நான்கு வேதங்களாலும் அறியப் படாத அருணுசலக்கடவுளே! நெற்றிக் கண்ணை யுடையவனே! உமது பாதாரவிந்தத்தை நினைத் துத தோத்திரஞ்செய்யாத அடியேன் இச்சரீரம் எடுத்தும் நரி புசிப்பதற்குக் கட்டுச்சோறு எனச் சுமந்து துன்பப்பட்டேன் எ-று. 91

பிறந்திறக்குந் தெய்வப் பிணைங்களைக் கொண் டாடேன், அறந்தழைக்குஞ் சோணகிரி யாரே—
பிறந்திறவா, வும்மைப் புகழ்ந்தே யுமக்கடிமை
யானபேர், தம்மைப் புகழ்வதல்லாற் ருன்.

(இ-ள்) தருமமே மிகுதியாய்த் தழைக்கும் திருவண்ணுமலையில் வசிக்குங் கர்த்தனே! பிறப்பு இறப்பு இல்லாத தேவரீரைத் தோத்திரஞ்

செய்து உமக்கு அடிமையான பக்தர்களைத் துதிப் பதல்லாமல் பிறந்து பிறந்திறக்குந் தெய்வம் என்னும் பிணங்களைக் கொண்டாடித் தோத்திரஞ் செய்யேன் எ-று. 92

தானவர்கண் மூப்புரத்தைத்தானெரித்து நஞ்சுகந்
வானவர்க்காச் சோணகிரி வள்ளலே!-யேனம்[தீர்
விருப்பா மலர்சூடி வேண்டினு னீண்ட
நெருப்பா விருந்தென்ன நீர்.

(இ-ள்.) சதுர்யுகத்திலும் அழியாத அருணுசலக் கடவுளே! மூப்புராதிகளான இராக்ஷசரது உபத்திரவத்தினுலும்சமுத்திரத்திலுதித்தவிஷத்தினது கொரேத்தினுலும் பயந்து துக்கித்த தேவர்களுக்காக அந்த ராக்ஷதர்களுடனே மூப்புரத்தை எரித்தும் கடலில் எழுந்த விஷத்தைப் புசித்தும் அவர்களை இரட்சித்தீர். மகாவிஷ்ணுவானவர் பன்றியாகித் தேவரீரது பாதாரவிந்தங்களைக் காண ஆசையோடு பூமியைத் துளைத்துக் கொண்டு சென்றுப் அவருக்குப் புலப்படாமல் நெருங்குதற்கு அரிய பெரிய அக்கினிமலையாய் இருந்தது என்ன சொல்வீர்? எ-று. 93

நீராழி நஞ்சுகந்த நித்தனே! சோணகிரி
யாரா வமுதே!யென் னையனே!—பாராளுந்
தாதையே பூசையறந் தானறியா மற்றிரியும்
பேதையேற் காராவார் பின்.

(இ-ள்.) சமுத்திரத்தில் பிறந்த விஷத்தை உணட பிறபபு இல்லாதவனே! திருவண்ணுமலையில் வசிக்குந் தெவிட்டாத அமிர்தமே! என் ஐயனே! சகல புவனங்களிலுள்ள சராசரங்களை

யும் இரட்சிக்கும் தந்தையே! உம்மைப் பூசிக்கும் நெறியும் தருமமும் அறியாமல் திரியும் அறிவு இல்லாதவனாகிய அடியேனுக்கு உம்மை அல் லாமல் ஆதரவு யார்? எ-று. 94

பின்னை யொருவரில்லை பேருலகிற் றஞ்சமா
வன்னந் தருமருணை யையரே—யென்னை
யெடுப்பதற்குங் காப்பதற்குமென்பிறவி நோயைக்
கெடுப்பதற்கு நீரே கெடீர்.

(இ-ள்.) சகல ஜீவஜெந்துக்களுக்கும் அன்னங் கொடுத்து இரட்சிக்கும் அருணாசலக் கடவுளே! என்னை ஒரு பொருளாக நினைத்துச் சிருஷ்டிப்ப தற்குஞ் சிருஷ்டித்து இரட்சிப்பதற்கும் எனது பிறப்பு என்னும் நோயை நீக்குதற்கும் இவ்வுல கில் தஞ்சமென்று அடைந்த என்னை இரட்சிப்ப தற்கும வேறொரு தெய்வமில்லை எ-று. 95

நீர்கொண்ட வேணி நிமலா!வென் னீள்பிறப்பை
யார்தொலைப்பார் நீயல்லாது ஆயுங்காற்-பார்மீதிற்
பொய்யா வரங்கொடுக்கும் புண்ணியனே! சோண [கிரி
யையயா கருணாலயா!

(இ-ள்.) கங்காதேவியைச் சடாமகுடத்தில் தரித்த சோதிஸ்வரூபனே! அழியாத வரத்தைக் கொடுக்கும் புண்ணியனே! அருணாசலக்கடவுளே! அன்பரது மனதை ஆலயமாகக்கொண்டவனே! பார்க்குமிடத்தில் எனது அளவில்லாத பிறப்பு இறப்பை அழிக்கவல்லவர் நீரே அல்லாமல் இப்பூவுலகில் யார்? எ-று. 96

கருணலயா! நின் கழல்பணிய மாட்டேன்
அருணசலாவென் றழையேன்—மரணந்த
காலத்திலோ துங்கருத்தறியேன் கண்ணையுன்றன்
கோலத்தில் வையேன் குறித்து.

(இ-ள்.) கிருபைக் கடலான ஐயனே! உமது பாதாரவிந்தங்களை வணங்கித் தோத்திரஞ் செய்யேன்; அருணசலக் கடவுளே என்றும் அழையேன்; மரணகாலத்திலும் உம்மை நினைத்து நற்கதியடையும் வழியும் அறியேன்; எனது கண்களைக்கொண்டு தேவரீரது ஸ்வரூபத்தைப் பாரேன் எ-று. 97

குறியே னிருபதத்தைக் கூறும்வகைசற்
றறியேனறிந் தவர்க்கொன் றுற்றேன்-சிறியேனி
ருயுமறை தேடரிய வண்ணு மலையானே! [ன
மாயுமிருந் தையா மனம்.

(இ-ள்.) நான்கு வேதங்களும் தேடுதற்கு அரிய அருணசலக் கடவுளே! சிறியன் ஆகிய யான் தேவரீரைத் துதித்து உமதுபாதாரவிந்தங்களை அடையும் வகையும் சற்றும் அறியேன், அறிந்த புண்ணியவான்களுக்கும் ஓர் உபகாரம் செய்யேன்; என் மனமானது சுகமாய் இருந்து அலைச்சல்பட்டு இறந்துபோம் எ-று. 98

ஐயா! மரப்பாவை யாடுவ துஞ் சூத்திரிதன்
கைவாசி யோபாவை கற்றதோ—வெய்யவினை
யென்னிச்சை யோவருணை யீசா! படைத்தளிக்கு
முன்னிச்சை யன்றோ வுரை.

(இ-ள்.) என் ஐயனே! மரத்தினுல் செய்த பதுமை நடிப்பது ஆட்டிவைக்கும் சூஸ்திரக் கயிருனது கைப்பழக்கததினுலோ அல்லது அந்தப் பதுமை நடிப்பதுபோல் கொடிய வினைகள் என்னிச்சையாற் செய்ததோ, அருணுசலக் கடவுளே ஜீவஜெந்துக்களைச் சிருஷ்டித்து இரட்சிக்கும் தேவரீர் இச்சையால் செய்வதல்லவோ? சொல்லும் எ-று. 99

உரைக்கு மடியா ருயிர்ப்பயிர் வாடாமற்
றரைக்குளானந்தவெள்ளந் தன்னை-நிரைக்குமே
யெண்ணுர் புரமெரித்த யெந்தை யருணகிரிக்
கண்ணு ரமுதமெனுங் கார்.

(இ - ள்.) மதியாதவர்களது முப்புரத்தை எரித்த என் ஐயணுகிய அருணுசலக் கடவுளது கிருபா நோக்கம் என்னும் மேகம் தமது மகிமையைப் பக்தியுடனே துதிக்கும் அடியாரது உயிர் என்னும் பயிர் வாட்டம் அடையாமல் இப் பூமியில் ஆனந்தம் என்னும் வெள்ளத்தை நிரப்பும் எ-று. 100

அருணகிரி யந்தாதி யழகுவெண் பாநூறும் [ல்
கருணையுடன்கற்ருேரைக் கண்டு-அருணையண்ண
வீருன பொன்னுலகில் வேந்தனுக்கு மாற்றல்
மாருமல் வைப்பார் மகிழ்ந்து.

(இ-ள்.) அருணகிரியந்தாதி என்னும் அழகு பொருந்திய வெண்பா நூறையும் பக்தியோடு வாசிப்பவர்களைப் பார்த்து அருணாசலக் கடவுள் சந்தோஷித்து மேன்மை பொருந்திய தேவ லோகத்தையாளுந் தேவேந்திரனுக்குச் சமமாகத் தேவலோகத்தில் எப்போதும் நீங்காமல் வைப்பார் எ-று.

அருணகிரியந்தாதி மூலமும் - உரையும்

முற்றிற்று.

---

மெய்கண்டதேசிகன் திருவடி வாழ்க.

Paper Issue Card No, Q. H. M. S. 259. (3-3-49) 2000 Cps.